# துண்டு, துண்டான அரசியல் அணுகுமுறை வேண்டாம்.

சி.அ.யோதிலிங்கம்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குப்பட்டு அது தீர்க்க முடியாத அரசியல் நெருக்கடியையும் உருவாக்கியுள்ளது. இந்த அவலத்திற்குள் இலங்கைத்தீவு அகப்பட்ட நிலையிலும் பெருந்தேசிய வாதம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான முல்லைத்தீவு - தண்ணி முறிப்பு குருந்தூர் ஐயனார் சிவன் ஆலயச் சுற்றாடலில் கடந்த 12ம் திகதி புத்தர் சிலையை நிறுவும் முயற்சி முன்னெடுக்கப்பட்டது. நீதிமன்றக்கட்டளையை மீறி அங்கு அமைக்கப்பட்ட இந்த விகாரையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கான பெருந் தொகையான பிக்குகளும், சிங்கள மக்களும் வருகை தந்தனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து குருந்தூர் மலை ஐயனார் சிவன் ஆலய நிர்வாகத்தினரும் , அரசியல் கட்சிகளும், பொது மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதாலும் முல்லைத்தீவு நீதிமன்றம் கட்டளையை மீறி செயற்பட்டதற்கு பொலிசாரிடம் விளக்கம் கேட்டதனாலும் சிலை நிறுவும் முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

குருந்தூர் மலையில் முல்லைத்தீவு மக்கள் சிறிய ஐயனார் சிவன் ஆலயத்தில் பூர்வீகக் காலம் தொடக்கம் வழிபாடுகளை நடாத்தி வந்தனர். தொல்பொருட் திணைக்களம் அதனைக் கையகப்படுத்தி ஆதிசிவன் ஆலயத்தை அகற்றி அவ்விடத்தில் புத்த விகாரை ஒன்றை கட்ட முயற்சித்தபோது குருந்தூர் மலை ஐயனார் சிவன் ஆலயநிர்வாகத்தினர் 2018ம் ஆண்டு இது தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். நீதிமன்றம் 13.09.2018இல் இது தொடர்பாக கட்டளையை விடுத்திருந்தது. அதில் குருந்தூர் மலைப் பிரதேசம் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் வருகின்ற பிரதேசம் எனவும் அப்பிரதேசத்தில் புதிதாக எந்தவிதமான கட்டிடங்களையும் அமைக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. பரம்பரையாக வழிபாடு செய்கின்ற சைவர்கள் அங்கு வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அதனை யாராலும் தடுக்க முடியாது எனவும் கூறப்பட்டிருந்தது.

இந்தக் கட்டளையை மீறியே புத்தர் சிலை நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ் விடயம் நீதிமன்றத்தில் முறையிட்டதன் பேரில் இது தொடர்பாக பொலீசார் விளக்கம் தரவேண்டும் என நீதிமன்றம் அறிவித்தது. கடந்த 23ம் திகதி நிகழ்ந்த விசாரணையில் பொலீசாரின் விளக்கம் திருப்தியில்லாததினால் மேலதிக அறிக்கை தரவேண்டும் என கோரியதற்கிணங்க வழக்கு எதிர்வரும் 30ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புத்தர் சிலை நிறுவும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோதராகலிங்கம் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சிவநேசன் ஆகியோரும் பொதுமக்களுடன் இணைந்து பங்குபற்றியிருந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத்வீரசேகர தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் கடந்த 21ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றினார். “குருந்தூர் மலை” வழிபாட்டை தடுத்து நிறுத்தியதில் வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னமும் பிரபாகரனின் நடவடிக்கைகளையே ஆதரித்து வருகின்றனர். பௌத்த சிங்கள மக்களின் பொறுமையை இயலாமையாக நினைக்க வேண்டாம். எமது பொறுமைக்கும் எல்லை உண்டு. 52 வீதமான தமிழ் மக்கள் சிங்கள மக்களுடனேயே வாழ்கின்றனர். நாட்டில் தமிழ் மக்கள் எந்தப் பிரதேசத்திலும் குடியமர முடியுமானால் சிங்கள மக்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது. “குடியேற முடியாது என்று யாரும் தெரிவிக்க முடியாது” எனக் கூறியிருக்கின்றார்.

குருந்தூர் மலை பற்றி மகாவம்சத்தில் விபரிக்கப்பட்டுள்ளது என்றும் 2021ம் அகழ்வாய்வில் பல பௌத்த தொல்பொருட்கள் அங்கு கண்டுபிடிக்கப்பட்டன என்றும் கூறியிருக்கின்றார்.

இந்த உரையாடலினூடாக மூன்று விடயங்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்.ஒன்று தென்னிலங்கையில் வாழும் 52 வீதமான தமிழர்கள் நெருக்கடிக்கு உள்ளாவார்கள். இரண்டாவது தமிழ் மக்கள் போல சிங்கள மக்களும் எங்கும் குடியேறலாம். மூன்றாவது குருந்தூர் மலை மகாவம்சத்தில் விபரிக்கப்பட்டுள்ள பௌத்த பிரதேசம் என்பவையே அவையாகும்.

இதில் முதலாவது விடயம் பெரும்தேசியவாதிகள் அடிக்கடிகூறும் விடயம்தான். தமிழ் மக்களின் விவகாரம் சர்வதேச மயப்பட்ட நிலையில் கூட பழையபாணி அச்சுறுத்தல்களை கைவிட அவர்கள் தயாராக இல்லை. இப் பழையபாணி அச்சுறுத்தல்கள் புதிய சூழலுக்கு கொஞ்சம் கூடப் பொருந்தப்போவதில்லை. இது போன்ற அச்சுறுத்தல்களையெல்லாம் மீறித்தான் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வரலாற்று ரீதியாக இடம்பெற்றுவந்தது. தற்போதும் இடம்பெற்று வருகின்றது. இவற்றுக்கெல்லாம் அஞ்சிய காலம் மலையேறிவிட்டது.

இரண்டாவது தமிழ் மக்கள் தென்னிலங்கையில் குடியேறியதுபோல சிங்கள மக்களும் வடக்கில் குடியேறலாம் என்கின்றார். தமிழ் மக்கள் அரசியல் நோக்கில் திட்டமிட்டு தெற்கில் குடியேற்றப்படவில்லை. தொழில் நிமித்தம் தாங்களாகவே காணிகளை விலைக்கு வாங்கி குடியேறினார்கள். எவருடைய காணிகளையும் பலவந்தமாக அபகரிக்கவில்லை. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றப்படும் சிங்கள மக்கள் கட்டமைப்பு சார் இன அழிப்பை மேற்கொள்வதற்காக திட்டமிட்டு அரசாங்கத்தின் நிதியுதவிகளுடன் குடியேற்றப்பட்டார்கள். இதற்குப் பின்னால் இருந்த பெருநோக்கம் தமிழ் மக்கள் ஒருதேசமாக இருப்பதை அழிப்பதே! இன்று இந்த அழிப்பின் கருவியாக அகிம்சையையும் சமாதானத்தையும் போதித்த புத்த பகவானும் பயன்படுத்தப்படுகின்றார்.

மூன்றாவது குருந்தூர் மலை ஒரு பௌத்த தொல்லியல் பிரதேசம் மகாவம்சம் அதனை நிரூபிக்கின்றது என்கின்றார். மகாவம்சம் பௌத்த நிறுவனம் ஒன்றினால் தனது மதத்தேவைக்காக எழுதப்பட்ட வரலாற்றுநூல். அதனை ஒரு தூய வரலாற்று ரீதியான ஒரு நூலாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஐரோப்பிய ஆய்வாளர்கள் இலங்கையின் வரலாற்று நூல்களுக்குள் என்ன இருக்கின்றது என்பதைவிட என்ன இல்லை என்பதை தேடிக் கண்டுபிடிக்க வேண்டுமென கூறியிருந்தமை இங்கு குறிப்பிடவேண்டியதாகும்.

சரி அது தொல்லியல் பிரதேசமாக இருக்கலாம். அங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டவையும் தொல்லியல் எச்சங்களாக இருக்கலாம். ஆனால் அவை பக்கச்சார்பின்றி உறுதிப்படுத்த வேண்டும். இலங்கை தொல்லியல் திணைக்களம் வரலாற்று ரீதியாக ஒரு ஆக்கிரமிப்புக் கருவியாகவே செயற்பட்டது. தற்போதும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. சர்வதேச ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் புகழ்பெற்ற தொல்லியலாளர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுடைய ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் என தமிழ்த்தரப்பு வலியுறுத்தியபோதும் அது கணக்கெடுக்கப்படவில்லை.

முல்லைத்தீவு நீதிமன்றம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் பீடத்தையும், குருந்தூா் மலையை ஒட்டிய கிராம மக்களையும் அகழ்வாய்வில் பங்குபற்றச் செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தது. அது கவனத்தில் எடுக்கப்படாது தொல்லியல் திணைக்களம் ஒருபக்கச் சாா்பாகவே அகழ்வுகளை செய்து முடித்திருக்கின்றது. இந்தச் செயன்முறை நீதிமன்றக் கட்டளையை மீறிய நீதிமன்ற அவமதிப்பு செயற்பாடாகும். தவிர இலங்கையில் முதலில் பௌத்தத்தை கொண்டுவந்தவா்கள் தமிழ் பௌத்தா்களே! எனவே இது ஏன் தமிழ் பௌத்தா்களால் பேணப்பட்ட இடமாக இருக்கக்கூடாது.

இதைவிட தொல்லியல் பிரதேசங்கள் நினைவிடங்களே தவிர வழிபாட்டிடங்கள் அல்ல. தொல்லியல் எச்சங்களை இருந்தவாறு பேணிப் பாதுகாப்பதுதான் தொல்லியல் திணைக்களத்தின் கடமையாகும். அதில் புதிய வழிபாட்டிடங்களை கட்டுவதற்கு தொல்லியல் திணைக்களத்திற்கு எந்த அதிகாரமும் கிடையாது. அனுராதபுரத்திலும் பொலநறுவையிலும் உள்ள சிவாலையங்கள் தொல்லியல் பிரதேசங்களாக பேணப்படுகின்றதே தவிர அங்கு புதிய சிவாலயங்கள் கட்டியெழுப்பப்படவில்லை.

இலங்கையின் தொல்லியல் பிரதேசங்கள் தொடா்பாக கலாநிதி இரகுபதியின் கூற்று ஒன்று உண்டு. தொல்லியல் பிரதேசங்களில் மேல்மட்ட அகழ்வுகளை செய்தால் பௌத்த சின்னங்கள் தென்படலாம். ஆழமாக அகழ்வுகளை மேற்கொண்டால் இந்துச் சின்னங்களே மேல்வரும் என்பதே அவரது கூற்றாகும். இக்கூற்றும் கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

முல்லைத்தீவு நீதிமன்றம் வழிபாட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது என கட்டளை விதித்தது. அதனை மீறி கட்டிடங்களை கட்டியமை நீதிமன்ற அவமதிப்பாகும். இலங்கையின் சட்ட முறைமையில் தொல்லியல் திணைக்களத்திற்கும் பெரும் தேசியவாதிகளுக்கும் நீதிமன்ற வில்க்கீடு இருக்கின்றதா என்ற ஐயமும் எழுகின்றது. அரசின் இயந்திரங்களே நீதிமன்றங்களை அவமதிக்கின்றது. என்றால் எதற்கு நீமன்றங்களை அமைப்பான் அவற்றை அகற்றிவிடுவதுதானே.

எனவே இந்த விவகாரத்திற்குள் தொல்லியல் பிரதேசமா? என்ற வரலாற்றுப் பிரச்சினை இருக்கின்றது. இன அழிப்பு என்ற ஆக்கிரமிப்புப் பிரச்சினை இருக்கின்றது. தொல்லியல் ஆய்வு அதற்கேயுரிய முறையியலில் பின்பற்றப்பட்டதா? என்ற ஆய்வு முறையியல் பிரச்சினை இருக்கின்றது. சட்ட ரீதியான அணுகுமுறை இருந்ததா? என்ற சட்டப் பிரச்சினை இருக்கின்றது. நீதிமன்ற அவமதிப்பு என்கின்ற நீதிப்பிரச்சினை இருக்கின்றது.

எனவே இத்தனை பரிமாணங்களுடன்தான் இந்த விவகாரம் நோக்கப்படல் வேண்டும். அமைதியாகப் போராட்டம் நடத்தியவர்க்ள் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ள தவறக் கூடாது.

தமிழ்த் தரப்பின் குருந்தூர் மலை தொடர்பான அணுகுமுறையிலும் தவறுகள் இருக்கின்றன. குருந்தூர் மலை விவகாரம் என்பது ஒரு ஆக்கிரமிப்பு பிரச்சினை. அதன்வழி அது ஒரு இன அழிப்புப் பிரச்சினை. இன அழிப்புப் பிரச்சினையை ஒரு தேசமாக அணுகவேண்டுமே தவிர சில கட்சிகள், தனி நபர்களின் விவகாரமாக அணுகக்கூடாது. ஒரு ஒருங்கிணைந்த செயற்பாடு அங்கு அவசியமானது. அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் ஒருங்கிணைந்து இதற்கு முகம்கொடுத்திருக்க வேண்டும். ஆனால் சிறிய குழுவே எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கேற்று இருந்தது. ஒருங்கிணைந்து மேற்கொண்டிருந்தால் பொலீசாரின் தாக்குதல்களையும் தவிர்த்திருக்கலாம். சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்கி உலகம் தழுவிய எதிர்ப்பு அலையையும் எழுப்பியிருக்கலாம். இலங்கைத் தீவு தற்போது எதிர்நோக்கும் நெருக்கடிச் சூழலில் இந்த எதிர்ப்பு அலை சர்வதேசத்தின் கவனத்தை நிச்சயம் ஈர்த்திருக்கும்.

துரதிஸ்டவசமாக எதிர்வினைகள் கூட இரண்டாம் மட்டத் தமிழத் தலைவர்களிடமிருந்தே வந்தன. முதலாம் மட்டத் தலைவர்கள் பெரியளவிற்கு வாயே திறக்கவில்லை. இது விவகாரத்தில் பாராளுமன்றத்தையும் போர்க்களமாக்கியிருக்கலாம். அதுவும் இடம்பெறவில்லை.

இங்கே மிகவும் முக்கியமானது பெரும் தேசியவாத அரசியலைக் கையாளும்போதும் சர்வதேச பிராந்திய அரசியலைக் கையாளும் போதும் ஒருங்கிணைந்த அரசியல் கட்டாயம் பின்பற்றப்படல் வேண்டும் என்பதுதான்.

துண்டு துண்டான அரசியல் நகர்வுகள் சில சலசலப்பை வேண்டுமானால் தரலாம். ஆனால் அதிர்வுகளை ஒருபோதும் தரப்போவதில்லை.